**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 29.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 6

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. மகேஷ் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஷ் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( சுப்பிரமணியன் என்ற அஜித் ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமநாதபுரம் தாலுகா இருட்டுரணி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் பட்டறையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி முனியசாமியை எனக்கு தெரியும். கடந்த 19.04.2023ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும் சாட்சி முனியசாமியிம் காளிமுத்து என்பவர் விட்டின் முன்பாக நின்றுகொண்டிருந்தோம். அப்போது உச்சிப்புளி ஆய்வாளரும் சார்பு ஆய்வாளரும் அங்கு வந்தாா்கள் அப்போது காளிமுத்து அவர்கள் வீட்டை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2. பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து சாட்சி முனியசாமி கையெழுத்து செய்தார்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

காளிமுத்து வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் எவ்வளவு துாரம் உள்ளது என்றால் என்னுடைய வீட்டிற்கும் காளிமுத்து வீட்டிற்கும் இடையே 100 மீட்டர் உள்ளது. காளிமுத்து வீட்டை சுற்றி வேறு வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். காவல் நிலையத்தில் என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் அங்கு வைத்த ஒரு கையெழுத்து பெற்றார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் நான் போட்டதாக சொல்லப்படும் கையெழுத்தை போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அங்கு வைத்து பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 29.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 7

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி. உதயசூரியா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. உதயசூரியா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( சுப்பிரமணியன் என்ற அஜித் ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமநாதபுரம் சித்தார்கோட்டை கிராமத்தில் நான் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் இரட்டையூரணி கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்தேன். அப்போது என்னிடம் பரிமளாதேவி என்பவர் கிராம உதவியாளராக பணியாற்றி வந்தார். கடந்த 20.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் என்னுடைய இரட்டையூரணி கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தேன். அப்போது என்னுடைய உதவியாளர் பரிமளாதேவியிம் உடன் இருந்தார். அப்போது உச்சிப்புளி காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் தொலைபேசியில்

இருட்டுரணி கிராமத்தை சேர்ந்த காளிமுத்து என்பவர் சுப்பிரமணி என்பவரால் கொலை செய்யப்பட்டுவிட்டதாகவும் அது சம்பந்தமாக மேற்படி சுப்பிரமணி இருட்டுரணி பஸ் ஸ்டாண்ட்டில் நிற்பதாகவும் அவரை கைது செய்து விசாரிக்க வேண்டியிருப்பதால் என்னை வரும்படி அழைத்ததால் நானும் எனது உதவியாளர் பரிமளாதேவியும் அன்று காலை 10.00 மணியளவில் இருட்டுரணி பஸ் ஸ்டாப்பில் நிற்பதாகவும் உடனடியாக இருட்டுரணி பஸ் ஸ்டாப்பிற்கு வரச் சொன்னார். நானும் எனது உதவியாளரும் இருடட்டுரணி பஸ் ஸ்டாப்பிற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரியை உச்சிப்புளி காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்தார். அவர் நடந்த சம்பவங்களை எங்கள் முன்பாக சொன்னார். அவர் கொலைக்கான காரணத்தைப் பற்றியும் ஆஜர் சவுக்கு கட்டையால் இறந்துபோன காளிமுத்தை தலையில் அடித்ததால் அவர் இறந்துபோனதாக கூறினார். மேலும் அவர் தன்னுடைய வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட மறைத்து வைத்துள்ள சவுக்கு கட்டையையும் டி.என்.65 ஏ.என் 7573 என்ற ஸ்கூட்டி பைக்கையும் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தார். அவர் கூறியதன் அடிப்படையில் நானும் காவலர்களும் எதிரியுடன் காளிமுத்து வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்றபோது எதிரியானவர் தன்னுடைய வீட்டில் வைத்திருந்த சவுக்குகட்டையை டி.என்.65 ஏ.என். 7573 என்ற ஸ்ட்டி வாகனத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை என் முன்னிடையிலும் எனது உதவியாளர் முன்னிலையிலும் எடுத்து ஆஜர் செய்தார். அதை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னால் மகஜரில் காலை 11.30 மணிக்கு கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் மகஜரில் நான் 1வது நபராக கையொப்பம் செய்துள்ளேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கபப்பட்டட பகுதி அ.த.சா.ஆ.3 ஆகும். எதிரி ஆஜர் செய்த சவுக்கு கட்டை மற்றும் டி.என்.65 ஏ.என். 7573 என்ற வாகனத்தை கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகும். எதிரி எடுத்து ஆஜர் செய்த சவுக்கு கட்டை அ.சா.பொ.1 ஆகவும் அந்த டி.என்.65 ஏ.என். 7573 என்ற வாகனம் அ.சா.பொ.2 ஆகவும்

குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசி மூலமாக எங்கு வரச்சொன்னார் என்றால் இருட்டுரணி பேருந்து நிறுத்தத்திற்கு வரச்சொன்னார். அவர் அழைத்ததின்பேரில் நானும், எனது உதவியாளரும் முதன்முதலாக இருட்டுரணி பேருந்து நிறுத்தத்திற்குத்தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் அந்த இடத்திற்க சென்றபோது காவல் ஆய்வாளர், ஆஜர் எதிரி மற்றும் காவலர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த இடத்திற்கு போவதற்கு முன்பாக எதிரியை அந்த இடத்தில் எவ்வளவு நேரம் பிடித்து வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியாது. நான் அங்கு சென்றபோது வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை எழுதிவைத்திருந்தார் என்றால் சரியல்ல. இருட்டுரணி பேருந்து நிறுத்ததத்தின் அருகில் நிறைய கடைகள் மற்றும் குடியிருப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. நான் அந்த பேருந்து நிறுத்தத்திற்கு சென்றபோது அந்த பேருந்து நிறுத்தத்தில் நிறைய பயணிகள் இருந்ததார்கள் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னுயை வாக்குமூலத்தை பதிவு செய்யும்போது அந்த இடத்தில் உள்ள கடைக்காரரை சாட்சியாக இருக்கச் சொல்லி அழைத்தாரா என்ாறல் இல்லை. வாக்குமூலம் பதிவு செய்த பின்னிட்டு நாங்கள் காளிமுத்து வீட்டிற்கு எதிரியுடன் சென்றோம். காளிமுத்து வீட்டை சுற்றியும் நிறைய குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். சா.பொ.1 ஆன கட்டையை எதிரியானவர் எந்த இடத்தில் இருந்து எடுத்து கொடுத்தார் என்றால் காம்பவுண்ட் சுவருக்கு அருகில் இருந்து எடுத்து கொடுத்தார். அந்த காம்பவுண்ட் சுவரானது வீட்டிற்கு பின்புறதத்தில் தென்புறத்தில் உள்ளது. பைக்கை எந்த இடத்தில் இருந்து எடுத்துக் கொடுத்தார் என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. பைக்கை போலீசார் கைப்பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். அந்த ஸ்கூட்டியான எந்த கம்பெனியால் தயார் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் எனக்கு

தெரியாது. அந்த ஸ்கூட்டியின் சேஸ் நம்பர் மற்றும் இன்சின் நம்பர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காளிமுத்து வீட்டில் வைத்து நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் கையெழுத்து போட்டேன். மேற்படி நடவடிக்கைகள் முடிந்தவுடன் நான் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள், எதிரியுடன் உச்சிப்புளி கா.நிலையத்திற்கு வந்தோம். உச்சிப்புளி கா.நிலையத்தில் வைத்து நான் ஒரு கையெழுத்து போட்டேன். நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் என்னை ஆய்வாளர் அழைக்கவில்லை என்றாலும் நான் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வரவழைத்து கையெழுத்து பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான், காவல் ஆய்வாளர், எதிரி மற்றும் காவல் சகிதம் காளிமுத்து வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் எங்கள் முன்னால் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஐ எதிரி அடையாளம் காட்டி எதிரி ஆஜர் செய்யவில்லை என்றாலும் அந்த சா.பொருட்களை எதிரி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்து அதை கா.ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் அந்த இடத்தில் வைத்து கைப்பற்றவில்லை என்றாலும் மேற்படி சா.பொருட்கள் மற்றும் எதிரி கொடுத்தாக சொல்லப்படும் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் வழக்கின் தன்மைகேற்ப பின்யோசனை செய்து தயார் செய்து வைத்திருந்தார் என்றும் கா.ஆய்வாளர் என்னை கா. நிலையத்திற்கு வரவழைத்த மேற்படி ஆவணங்களில் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் கா.ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 29.01.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 8

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. கருணாமூர்த்தி என்பவரின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கருணாமூர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( சுப்பிரமணியன் என்ற அஜித் ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமநாதபுரம் தாலுகா, உச்சிப்புளியில் குடியிருந்து வருகிறேன். நான் உச்சிப்புளியில் நிலா ஸ்டுடியோ என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். கடந்த 21.04.2023 ம் தேதியன்று உச்சிப்புளி காவல் நிலையத்தில் இருந்து இரட்டையூரணி கிராமத்தில் சாட்சி அ.சா.1 ராணியின் கணவர் இறந்துபோனது சம்பந்தமாக சாட்சிகளிடம் விசாரணை செய்யயவுள்ளதாகவும் அதை வீடியோவில் ரிக்கார்டு செய்யவும் வரச்சொன்னார்கள். அவ்வாறு அழைத்ததின்பேரில் நான் காலை 10.00 மணிக்கு இரட்டையூரணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். அப்போது காவல் ஆய்வாளர்

அ.சா.1 ராணி மற்றும் அனிதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதை நான் வீடியோவாக பதிவு செய்தேன். அந்த பதிவு செய்யப்பட்ட காப்பி என்னிடம் காட்டப்படுவதுதான். அவ்வாறு வீடியோ எடுத்ததை கா. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி சாட்சியின் வாக்குமூலத்தை தனித்னியாக ஆடியோவில் இருந்து சி.டி ஆக கண்வர்ட் பண்ணி கொடுத்தேன். நான் ெ◌ காடுத்த சி.டி.க்கள் அ.சா.பொ.3 மற்றும் அ.சா.பொ.4 ஆகும். அதற்கு நான் வழங்கிய 65பி சாட்சி சட்டத்தின்படி நான் வழங்கிய சான்று அ.த.சா.ஆ.5 ஆகும். அது எதிரியின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கடந்த 8 வருடங்களாக அந்த கடையில் பணி செய்கிறேன். உரிமையாளரும் நான்தான். கடையை நடத்துவதற்கான லைசன்ஸ் உள்ளதா என்றால் அந்த கடையை நடத்துவதற்கு அரசிடமிருந்து அனுமதி பெறவில்லை. 8 வருடங்களுக்கு மேலாக நான் சட்டத்திற்கு புறம்பாக அந்த கடையை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சங்கத்தின் மூலம் அனுமதி பெற்று அந்த கடையை நடத்தி வருகிறேன். நான் வீடியோ ஆடியோ எடுப்பது சம்பந்தமாக டிப்ளமோ கோர்ஸ் முடித்துள்ளேனா என்றால் டிப்ளமோ படிக்கவில்லை ஐடிஐ படித்துள்ளேன். நான் ஏசி மெக்கானிக்கில் ஐடி படிப்பு முடித்துள்ளேன். சட்ட விரோதமாக சி.டி யை பதிவு செய்து விற்பது உண்டு என்றால் சரியல்ல. நான் முறையாக உரிமை பெறாமல் கடை நடத்தி வருவதாலும் அதனால் நான் எடுத்த இந்த வழக்கு சம்பந்தமான சா.பொ.4 மற்றும் சா.பொ.5 சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ஒரு நபருடைய குரலை மற்றொரு நபர் பேசுவதுபோல் பதிவு செய்ய முடியுமா என்றால் எடிட்டிங்கில் பதிவு செய்யலாம். ஒரு நபருடைய வீடியோவை வைத்து அவருடைய வாய்சை உருவாக்க முடியுமா என்றால் அவ்வாறு செய்ய வாய்ப்புகள் குறைவு. இன்றைய காலகட்டத்தில் பதிவு செய்ய டெக்னாலஜியில் ஏற்பட்டுள்ள

முன்னேறறத்தை வைத்து அந்த ஆடியோவிற்கு ஏற்ப குரலை தயார் செய்ய முடியும் என்றால் சரியல்ல. நான் படித்த படிப்புக்கும் நான் செய்யும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் இந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ஒரு நபர் வீடியோவை வைத்து மார்ப்பிங் செய்ய முடியுமா என்றால் வீடியோவை வைத்து செய்ய முடியாது. இந்த வழக்கு விசயமாக நான் எத்தனை நபர்களின் ஆடியோவும் வீடியோவும் பதிவு செய்தேன் என்றால் 2 நபர்களைத்தான். நான் அவ்வாறு வீடியோ மற்றும் ஆடியோவை ராணி மற்றம் அனிதா ஆகியயோர்களை மட்டுத்தான் எடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆடியோவில் உள்ள எழுத்துக்கள் ராணி மற்றும் அனிதா ஆகியவற்றை நான் எழுதவில்லை. நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் ராணி மற்றும் அனிதா ஆகியோர்களின் வாக்குமூலத்தை நான் வீடியோ எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.5 ல் உள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். நான் 21.04.2023 ல் அந்த கையெழுத்தை போட்டேன். நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் அந்த கையெழுத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன் என்றால் சரியல்ல. அநத் ஆவணத்தில் என்ன விபரம் எழுதப்பட்டது என்றால் நான் வீடியோ எடுத்தது சம்பந்தமாக அந்த கையெழுத்தை போட்டேன். நான் அங்கீகாரம் இல்லாமல் கடை நடத்தி வருவதால் காவலர்கள் துணை வேண்டும் என்பதற்காக அவர்கள் ஆலோசனைப்படி மேற்படி ஆவணங்கள் மற்றும் சா.பொ.களை தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .